

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் தண்டலம் என். கிருஷ்ணமூர்த்தி சகோதரர் மறைந்த என்.மோகன் அவர்களின் படம் திறப்பு விழா ஒன்றிய கழகச் செயலாளரும் தலைமை செயற்குழு உறுப்பினருமான எல்லாபுரம் ஜெ.மூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் அன்னாரின் திருவுருவப்படத்தை திறந்து வைத்து மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் ஒன்றிய செயலாளர் ஆ.சத்தியவேலு, பொதுக்குழு உறுப்பினர் ஏ.வி.ராமமூர்த்தி, நிர்வாகிகள் டி.ரவி,பா.து.தமிழரசன், சிவாஜி, சிவசங்கர், டில்லி சங்கர், வெங்கடேசன், ஓட்டுனர் அணி கே. ராஜேஷ், உள்பட திமுக நிர்வாகிகள் உள்ளனர்

கோவை பெரியார் நூலகத்துக்கு 2 நாள் அரசு விடுமுறை!

அறிவுலகத்திற்கு லீவு விட்ட அறிவார்ந்த த.வெ.க. ஆட்சி!

தி.மு.க. விமர்சனம்!

கோவை, அக். 22-

கோவை பெரியார் நூலகத்துக்கு 2 நாள் அரசு விடுமுறை அளிக்கப்பட்ட நிலையில், அறிவுலகத்திற்கு லீவு விட்ட அறிவார்ந்த ஆட்சி, த.வெ.க. ஆட்சி என தி.மு.க. விமர்சித்து உள்ளது. கோவை காந்திபுரம் பஸ் ஸ்டாண்ட் அருகே 300 கோடி ரூபாய் செலவில் பெரியார் அறிவுலகம் என்ற பெயரில் பிரமாண்ட நூலகம் கடந்த தி.மு.க. ஆட்சியில் கட்டப்பட்டது. இந்த நூலகத்தை சமீபத்தில் முதல்வர் விஜய் திறந்து வைத்தார். இந்த நூலகத்திற்கு ஆயுத பூஜை மற்றும் விஜய தசமியை முன்னிட்டு 19 மற்றும் 20ம் தேதி விடுமுறை வழங்கி மாவட்ட நிர்வாகம் உத்தர விட்டது.

இந்த நிலையில், தி.மு.க. முன்னாள் அமைச்சர் டிஆர்பி ராஜா சோசியல் மீடியாவில் ஆயுத பூஜைக்கு பெரியார் அறிவுலகத்திற்கு லீவு விட்டு அறிவார்ந்த ஆட்சி இன்றைய த.வெ.க. ஆட்சி. பேஷ் பேஷ் ஆனால், அறிவாலயத்திற்கு கலைஞர் திறந்து வைத்த அண்ணா நூற்றாண்டு நூலகம் இன்றும் திறந்திருக்கிறது.

அது சரி அறிவுக்கு விடுமுறை விட்டிருக்கும் ஆட்சியில் இது அதிசயம் அல்லவே என பதிவிட்டிருக்கிறார். பெரியார் அறிவுலகம் கல்வித் துறை மூலமாக பராமரிக்கப் படுகிறது.

கல்வி நிறுவனங்கள் அனைத்துக்கும் விடுமுறை வழங்கிய நிலையில், அந்த துறையின் கீழ் இயங்கி வரும் பெரியார் அறிவுலகத் திற்கும் விடுமுறை விடப் பட்டது என கோவை மாவட்ட கல்வித்துறையினர் தெரிவித்தனர்.

நாகர்கோவில் மாநகரப் பகுதியில் கால்வாய்கள் தூர்வாரும் பணி!

எஸ். ஆஸ்டின் எம்.எல்.ஏ. ஆய்வு!

நாகர்கோவில், ஆக். 22-

நாகர்கோவில் மாநகராட்சிக்கு உட்பட்ட பறக்கின் கால்வாய் மற்றும் காங்கேயன் கால்வாய் நீண்ட நாட்களாக தூர்வாரப்படாமல் மணல் தூர்ந்து காணப்பட்டது. இதனால் மழை நேரங்களில் மழை நீர் சாலைகளில் பெருக்கெடுத்து ஓடியது.

எனவே கால்வாய்களை



திருவள்ளூர் நகராட்சி 14வது வார்டு பகுதியில் பருவ மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நகர மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன் கால்வாய் தூர்வாரும் பணிகளை ஆய்வு மேற்கொண்டார் உடன் முன்னாள் நகர மன்ற தலைவர் பொன்.பாண்டியன், நகராட்சி பொறியாளர் சரோஜா மேற்பார்வையாளர் சீனிவாசன், துப்புரவு அலுவலர் மோகன் துப்புரவு ஆய்வாளர் விஜய் மற்றும் பலர் உள்ளனர்.

வடகிழக்கு பருவ மழைக்கு முன்னதாக தூர்வார வேண்டும் என்று எஸ். ஆஸ்டின் எம்.எல்.ஏ. மாவட்ட கலெக்டர் மற்றும் மாநகராட்சி ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்திருந்தார். இதனைத் தொடர்ந்து காங்கேயன் கால்வாய் மற்றும் பறக்கின் கால்வாயை தூர் வாரும் பணி நடைபெற்று வருகிறது.

ஜே.சி.பி. இயந்திரம் மூலம் இப்பணிகள் நடந்து வருகின்றன. தூர்வாரும் பணிகளை எஸ். ஆஸ்டின் எம்.எல்.ஏ. நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்பு எஸ்.ஆஸ்டின் எம்.எல்.ஏ. கூறியதாவது:

நாகர்கோவில் மாநகர பகுதியில் வடகிழக்கு பருவ மழைக்கு முன்னதாக கால் வாய்களை தூர்வாரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. காங்கேயன் கால்வாய் 2 கிலோமீட்டர்தூரத்திற்கும், பறக்கின் கால்வாய் 3 கிலோ மீட்டர் தூரத்திற்கும் தூர் வாரப்படுகிறது. கால்வாய்களில் உள்ள புதர்கள் அகற்றப்பட்டு மண் தோண்டப்பட்டு கால்வாயை சீரமைக்கும் பணி நடந்து வருகிறது. நாகர்கோவில் நகரில் உள்ள அனைத்து கால்வாய்களும் தூர்வாரப்பட்டு சுத்தம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்த ஆய்வில் மாநகராட்சி மேயர் மேரி பிரின்சிலதா, மண்டல தலைவர் அகஸ்டினா கோகிலவாணி, கவுன்சிலர்கள் அன்னலட்சுமி, பியாசா ஹாஜி பாபு, தி.மு.க. வட்ட செயலாளர்கள் நாகராஜன், கண்ணன் மற்றும் மாநகராட்சி உதவி பொறியாளர்கள் ராஜா, பழனியம்மாள், சுஜின் ஆகியோர் உடனிருந்தனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கடலூர் இரெ. இளம்வழுதி
அக்டோபர் 22 (1970)



அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் திராவிடர் கழக மாணவர் அமைப்புக்கு செயலாளராக இருந்தவர்.

தி.மு.க. தொடங்கிய நாளிலிருந்து பல்வேறு பொறுப்புகளில் செயல்பட்டவர்.

'பொன்மொழி' என்ற கழக இதழை தனது இறுதி காலத்தில் தொடங்கி நடத்தினார்.

தலைசிறந்த வழக்கறிஞராக, தலைமைக் கழகப் பேச்சாளராக விளங்கினார்.

1967ல் சட்டப்பேரவை உறுப்பினராக பணியாற்றியுள்ளார். அறிஞர் அண்ணாவால் 'கறுப்பு இளவரசர்' என அழைக்கப்பட்ட இவர், தலைவர் கலைஞரின் ஆருயிர் நண்பர். இறுதி மூச்சு வரை, இயக்கப் பணியாற்றிய பகுத்தறிவு பண்பாளர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

தமிழ்நாடு காவல்துறையில் தமிழுக்கே இடமில்லையா!

த.வெ.க. ஆட்சியில் 'இந்தியும் ஆங்கிலமும்' இருமொழிக் கொள்கையா?

தி.மு.கழக சமூக வலைதளப் பதிவில் கேள்வி!

சென்னை, அக்.22-

தமிழ்நாடு காவல்துறையில் தமிழுக்கே இடமில்லையா என்றும், த.வெ.க. ஆட்சியில் இந்தியும் ஆங்கிலமும் தான் இருமொழிக் கொள்கையா என்று வினாக்கள் எழுப்பி தி.மு.க. சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிடப்பட்டுள்ளது.

அதுவருமாறு:-

தமிழும் ஆங்கிலமும் தான் தமிழ்நாட்டின் இருமொழிக் கொள்கை.

தவெக ஆட்சியில் அது "இந்தியும் ஆங்கிலமும்" என்ற இருமொழிக் கொள்கையாக மாறிவிட்டதா?

காவல் துறை கொடி நாளில், இந்தியும் ஆங்கிலமும் மட்டும் இடம்பெற்றுள்ள badge-ஐ தமிழ்நாடு காவலர்கள் சீருடையில் அணிய வேண்டும் என்று கட்டாயப்படுத்தப் படுவது ஏன்?

தமிழ்நாடு காவல்துறையில் தமிழுக்கே இடமில்லையா?

காவல்துறை என்பது மாநில அரசின் அதிகாரத்திற்குட் பட்ட துறை என்பதை, அந்தத் துறையைத் தனது நேரடிப் பொறுப்பில் வைத்திருக்கும் முதலமைச்சர் அறிவாரா?

அல்லது மாநிலத்தின் மொழி உரிமையோடு சேர்த்து,



காவல்துறை மீதான தனது அரசியல் பொறுப்பையும் ஒன்றிய அரசிடம் ஒப்படைத்து சரணடைந்துவிட்டாரா?

தமிழ்நாட்டில் தமிழ் கேட்பது கூட இன்று ஒரு கேள்வியாக வேண்டிய நிலை வந்திருப்பதே வேதனை.

குறிப்பு: பல ஆண்டுகளாக ஒன்றிய அரசு அழுத்தத்தை கொடுத்த நிலையில் திராவிட மாடல் அரசு ஒருபோதும் அதை ஏற்காமல் இருந்தது. இன்றைய அரசுக்கு முதுகெலும்பு ஏது!

இவ்வாறு அதில் பதிவிடப்பட்டுள்ளது.

த.வெ.க. அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்காததன் எதிரொலி:

சென்னை சாலைகள் மழையில் கடுமையாக சேதம் - பொதுமக்கள் கடும் அவதி!

மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபடாமல் விஜய் அரசு ஆழ்ந்த உறக்கம்!

சென்னை, அக். 22 -

த.வெ.க. அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்காததால் சென்னை சாலைகள் மழையில் கடுமையாக சேதமடைந்துள்ளன. பருவமழைக்கு முன்பே சாலைகளை சீரமைக்காமலும், புதிய சாலைகளை அமைக்காமலும் அலட்சியம் காட்டியதால் மக்கள் கடும் அவதியடைந்துள்ளனர்.

வடகிழக்கு பருவமழை தொடங்கிய முதல் நாளில் இருந்தே சென்னையில் மழை வெளுத்து வாங்கி வருகிறது. இந்நிலையில், விஜயின் த.வெ.க. அரசு, பருவமழைக்கு முன்பே சாலைகளை சீரமைக்காமலும், புதிய சாலைகளை அமைக்காமலும் அலட்சியம் காட்டியதால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. குண்டும், குழியுமான சாலைகளில் மழைநீர் தேங்கியுள்ளதால் பள்ளம் இருப்பது தெரியாமல் வாகன ஓட்டிகளும், பாதசாரிகளும் கீழே விழுந்து செல்லும் அவலம் நிலவுகிறது. மழைநீரில் கழிவு நீரும் கலந்திருப்பதால் சாலைகளில் செல்லும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். சென்னையில் இயல்புவாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளநிலையில், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபடாமல் த.வெ.க. அமைச்சர்களும், அக்கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களும் வீடுகளில் முடங்கி உள்ளதாக மக்கள் கொந்தளிக்கின்றனர்.

வேளச்சேரி

இரவு முழுவதும் பெய்த கனமழையால் சென்னை வேளச்சேரி பகுதியில் உள்ள சாலைகளிலும், குடியிருப்பு பகுதிகளிலும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

இதனால் இப்பகுதி மக்கள் மிகுந்த பாதிப்புக் குள்ளாகினர். கடந்த தி.மு.க. ஆட்சியில் பல்வேறு மழைக்கால திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டாலும், அந்த மழை நீர் வடிகால்வாய்களை ஆளும் த.வெ.க. அரசு முறையாக தூர்வாராததால் முழங்கால் அளவிற்கு தண்ணீர் தேங்கியது. இதனால் அலுவலகம் செல்வோரும் பொது மக்களும் பாதிப்புக் குள்ளாகினர்.

முதலமைச்சராக செயல்படுங்க போதும்!

தி.மு.க. தகவல்தொழில்நுட்ப அணி ட்விட்டர் பதிவு!



எப்பா டம்மி. நீங்க அண்ணனாகவும் இருக்க வேண்டாம் - ஆட்டுக்'குட்டியாகவும் இருக்க வேண்டாம் -காவல்துறையை கையில் வைத்திருக்கும் ஒழுங்கான முதலமைச்சரா செயல்படுங்க போதும்!

#செஞ்சிசிறுமிஎங்கே?

மூதேவிகள்!



தேர்தல் ஆணையத்தை கைப்பாவை
ஆக்கிக் கொண்டு

ஆட்சியில் தங்களை அமர்த்துவதற்கு
ஏதுவான அளவில் வாக்காளர்
பட்டியலை தயாரித்து

அதன் மூலம்
தொடர்ந்து
நாட்டை தாங்களும்

தங்களின்
ஆதரவு பெற்ற அடிமைகளே
பெரும்பான்மை மாநிலங்களையும்
ஆள வேண்டும் என்பதற்கான
ஏற்பாடு தான்

"SIR – EVM – ஞானேஷ்குமார் ஆகியவை
என்பது
அம்பலப்பட்டு நிற்கிறது.

அப்படி என்றால் இந்திய தேசத்தின்
மாட்சிமை மிக்க ஜனநாயகம்
மீட்கப்பட ரத்துசெய்யப்பட
வேண்டியது SIR– EVM – ஞானேஷ்குமார்
மட்டுமல்ல;
இந்த மூதேவிகள் இதுவரை
கூடி நடத்திய தேர்தல்களும் தானே...

என்னநாஞ்
சொல்றது



மருது அழகுராஜ்
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்

அரசு அச்சக தொ.மு.ச. பொதுச் செயலாளர் எஸ்.யு.பிரபாகர் மறைவு!

அரசு அச்சக தொ.மு.ச. நிர்வாகிகள் அஞ்சலி!

சென்னை,அக்.22-

அரசு அச்சக தொ.மு.ச. பொதுச்செயலாளர் எஸ்.யு. பிரபாகர் உடல்நலக்குறைவு காரணமாக 18.10.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்து ஏராளமான அரசு அச்சக தொ.மு.ச. நிர்வாகிகள், கழகத்தினர் அன்னாரது உடலுக்கு அஞ்சலி செலுத்தினர். அன்னாரது இறுதி சடங்குகள் 19.10.2026 திங்கட்கிழமை அன்று நடைபெற்றது. அ.அ.தொ.மு.ச. நிர்வாகிகள் சார்பில் அடக்கம் செய்த அன்றைய தினமே அன்னாருக்கு இரங்கல் கூட்டம் நடைபெற்றது.

